**கவனிக்க.**- *11.05.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1759 - 2012 මැයි මස 18 වැනි සිකුරාදා - 2012.05.18

*1759 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி II – சட்ட சம்பந்தமானது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மால்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 58 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழங்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**கவனிக்க.**- (i) *த பேரண்ட்ஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2012, பெப்புருவரி 24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(ii) *புலத்சிங்கள ஜனசக்தி மகா சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2012, பெப்புருவரி 24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(iii) *இலங்கை நிருவாக அபிவிருத்தி, ஆராய்ச்சி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2012, மாச்சு 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

### *வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான*

### *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்***. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, *அதாவது 2012, மே மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, மே மாதம் 11 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# நானாவித அறிவித்தல்கள்

**கொழும்பு மேல் மாகாண உயர் நீதிமன்றில்**

*(குடியியல் நியாயாதிக்கத்தைச் செலுத்துதல்)*

*டபிள்யூ. லியோ பெர்னாண்டோ (மத்தகெதர) எஸ்டேட் கம்பனி லிமிட்டெட்டை முடிவிடுவதற்கான விண்ணப்பம் விடயத்தில்*

*காந்தி பெர்னான்டோ*
*இல. 10, விஜேசேகர பிளேஸ்,*
*களுத்துறை,*

*மனுதாரர்.*

வழக்கு இல.
H.C.(Civil)02/2012/CO

*எதிர்*

*டபிள்யூ. லியோ பெர்னாண்டோ (மத்தகெதர) எஸ்டேட் கம்பனி லிமிட்டெட்,*
*இல. 1, காசல் ரெறாஸ்,*
*கொழும்பு 08*

*................ பிரதிவாதி*

*களுத்துறை தெற்கு இல.10 விஜேசேகர பிளேஸ் காந்தி பெர்னாண்டோ என்பவரால் மேற்குறிப்பிட்ட கம்பனியை முடிவிடும்படி மனு ஒன்று கொழும்பு வர்த்தக உயர் நீதிமன்றில் 2012, தை 23 இல் சமர்ப்பிக்கப்பட்டது. இக் குறிப்பிட்ட மனு நீதிமன்று முன்னால் 2012 வைகாசி 17 இல் அழைக்கப் பணிக்கப்பட்டுள்ளது. இம்மனு சம்பந்தமாக பிறக்கப்படவிருக்கும் கட்டளைக்கு சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ கருத்து தெரிவிக்க விரும்பும் கடன் கொடுத்தவர் அல்லது குறித்த கம்பனிக்கு உடனுதவி வழங்கியவர்கள் அக்குறித்த நேரத்தில் தானாகவோ அல்லது தனது பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி மூலமாகவோ தோன்றலாம். அத்துடன் இம்மனுவில் பிரதி தேவைப்படும் உடன் கொடுத்தவர் அல்லது கம்பனிக்கு உடனுதவி வழங்கியவர்கள் அதற்கான கட்டணத்தை கீழே கையொப்பமிட்டவருக்குச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம் :-*

*கே. உபேந்திர குணசேகர*
*மனுதாரரின் சட்டத்தரணி*
*இல. 135-1/3, குணசிங்கபுர அலுவலக கட்டிடம்,*
*புனித செபஸ்தியன் வீதி,*
*கொழும்பு 12,*

***குறிப்பு***.- *குறிப்பிட்ட மனுவின் அழைப்பிற்கு சமூகமளிக்க உத்தேசிக்கும் எந்தவொரு நபரும் பதிவு செய்யப்பட்ட தபாலில் எழுத்து அறிவித்தல் மூலம் மேற்குறிப்பிட்ட சட்டத்தரணிக்கு தெரிவித்தல் வேண்டும். அவ் அறிவித்தல் பெயர்கள், விலாசங்கள், அல்லது கம்பனியாயிருப்பின் கம்பனியின் பெயர் விலாசம் என்பனவற்றை உள்ளடக்கியதாகவும் அவ் அறிவித்தல் அவரால் அல்லது அவரது பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணியால் கையொப்பமிடப்பட்டு மேலே பெயரிடப்பட்டவருக்கு 2012, வைகாசி 16 மாலை 4 மணிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக கையளித்தோ அல்லது பதிவுத் தபால் மூலமோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.*

*கே. உபேந்திர குணசேகர*
*மனுதாரரின் சட்டத்தரணி.*

*5-385*